# பெ.சண்முகத்தின் உண்மை முகம் - 3

“இந்த ஆட்சி மாற்றம், தி.மு.க., அ.தி.மு.க. அல்லாத ஒரு ஆட்சி வேண்டும் என்பதற்காக மக்கள் வாக்களித்துள்ளார்கள்” என்கிறார் மார்க்சிஸ்ட் செயலாளர் பெ.சண்முகம். அந்த நோக்கத்தோடு மக்கள் வாக்களித்து இருந்தால் விஜய் கட்சி 160 இடங்களுக்கு மேல் வெற்றி பெற்றிருக்க வேண்டும். பெரும்பான்மையை நிரூபிக்கத் தேவையான 117 இடத்தையே பெறாதவர் தான் விஜய். 16 தொகுதிகளில் மிகக் குறைவான வாக்குகளில் வெற்றி பெற்றுள்ளது அவர் கட்சி. எட்டு மாவட்டங்களில் எந்தத் தொகுதியையும் கைப்பற்றவில்லை அவர் கட்சி.

1.55 கோடி வாக்குகளை தி.மு.க.கூட்டணியும், 1.34 கோடி வாக்குகளை அ.தி.மு.க. கூட்டணியும் பெற்றுள்ளன. தி.மு.க. கூட்டணியை விட 17 லட்சம் வாக்குகளை தான் கூடுதலாகப் பெற்றுள்ளார் விஜய். எனவே இதில் சண்முகம் மகிழ்ச்சி அடைய எதுவும் இல்லை.

அதே சண்முகம் தான், ‘ஆட்சி அமைக்க எந்தவொரு கட்சிக்கோ அணிக்கோ தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை’ என்றும் அதே கட்டுரையில் சொல்கிறார். தனிப்பெரும்பான்மை கிடைக்காத விஜய், தி.மு.க. கூட்டணியில் வென்ற கட்சிகளுக்கு அமைச்சர் பதவி கொடுத்தும், அ.தி.மு.க.வினருக்கு அமைச்சர் பதவி தரப்போவதாக நடித்தும் தனக்கு பெரும்பான்மை இருப்பதைப் போல காட்டி முதலமைச்சர் நாற்காலியில் இருக்கிறார்.

**ஆதரவு தந்த கட்சிகளை நம்பாமல் அ.தி.மு.க.வின் நான்கு உறுப்பினர்களை ராஜினாமா செய்ய வைத்துள்ளார் விஜய்.இன்னும் அதே பேரங்களை நடத்தி வருகிறார் விஜய். அவர்கள் கணக்குப் படி 15 தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் வர வைக்க வேண்டுமாம். அதில் விஜய் கட்சியே வெற்றி பெறுமாம். வெற்றி பெற்றதும் இந்த நான்கு கட்சிகளுக்கும் அல்வா தரப்படுமாம். இத்தகைய கேவலமான குதிரை பேர ஆட்சியை ஆதரிப்பது அவமானமாக இல்லையா?**

தி.மு.க. ஆட்சிமீது குற்றச்சாட்டுகளை இந்தக் கட்டுரையில் அடுக்குகிறார் சண்முகம். இது எதுவும் மே 4 ம் தேதிக்கு முன்பு வரை தெரியவில்லையா? இரண்டு சீட் ஜெயிப்பதற்கு வாயை மூடிக் கொண்டு இருந்தாரா? தி.மு.க. ஆட்சியை ஆதரித்து அவர் பேசிய பேச்சுகளே அவருக்கான பதில்கள். ‘ தி.மு.க.வின் தொடர் வெற்றியை உறுதிப்படுத்தும் 20 காரணிகள்’ என்று ‘தீக்கதிரில்’ ஒரு பக்கத்துக்கு ( 19.4.2026) எழுதி இருக்கிறார்கள். அதை எடுத்து அவரே படிக்கட்டும்.

“கடந்த 2021இல் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஒரு திறமையான நிர்வாகியாகத் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார். எவ்விதப் பாகுபாடுமின்றி அனைத்து மாவட்டங்களுக்கும் சீரான வளர்ச்சியை உறுதி செய்துள்ளார். குறிப்பாக, பேரிடர் காலங்களில்

**ப.திருமாவேலன்**

நேரடியாகக் களத்தில் இறங்கிப் பணியாற்றிய விதம் மக்கள் மத்தியில் அவருக்கு ஒரு ‘பாதுகாவலர்’ என்ற பெயரைத் தந்துள்ளது. அரசு இயந்திரத்தைச் சுணக்கமின்றி இயக்கியதுடன், கட்சித் தலைவராகவும் கூட்டணி கட்சிகளை அரவணைத்துச் செல்வதில் அவர் காட்டிய முதிர்ச்சி, இந்தத் தேர்தலில் அவருக்கு மிகப்பெரிய பலமாக உருவெடுத்துள்ளது” என்று தான் தொடங்கியது இந்தக் கட்டுரை.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வாழ்வாதார மாற்றம், விடியல் பயணம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டங்கள், சிதையாத மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி பலம், தொழில் வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கம், மாநில சுயாட்சியும் ஒன்றிய அரசின் நிலைப்பாடும், நீட் தேர்வுக்கு எதிரான போராட்டங்கள், மக்களைத் தேடி மருத்துவம் என்பது ஒரு முன்னோடித் திட்டம், சமூகநீதி, சிறுபான்மையினரின் முழுமையான ஆதரவு, ஆன்மீகமும் கோயில் நிர்வாகச் சீர்திருத்தங்களும், நவீன உட்கட்டமைப்பு, நகர்ப்புற வளர்ச்சி என்று தனித்தனி தலைப்புகள் போட்டு திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விவரித்ததும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரப்பூர்வ நாளிதழ் தான். ஒரே மாதத்தில் சண்முகம் மனம் போன போக்கில் எழுதுகிறார்.




**தி.மு.க. ஆட்சி நவீன தாராளமய பொருளாதாரக் கொள்கையைக் கடைப்பிடித்ததாம். இதனால் மக்களுக்கு அதிகமான பாதிப்புகள் ஏற்பட்டதாம். மக்கள் கோபப்பட்டார்களாம். கேரளாவில் மார்க்சிஸ்ட் அரசாங்கம் கடைப்பிடித்ததும் நவீன தாராளமய பொருளாதாரக் கொள்கை தான். அதனால் கோபம் அடைந்த இளைஞர்கள் தான் மார்க்சிஸ்ட் அரசாங்கத்தை கேரளாவில் தூக்கி வீசினார்களா?**

கேரளாவில் அதானி குழுமத்தின் முதலீடுகளை மார்க்சிஸ்ட் அரசு அனுமதித்தது. விழிஞ்சம் துறைமுகம் அதானி கையில். கலமச்சேரி தளவாட பூங்கா அதானி குழுமத்தால் தொடங்கப்பட்டது. பிரதமர் மோடியும் முதலமைச்சர் பினராயி விஜயனும் அதானியும் ஒன்றாக நின்று பேசிக் கொள்ளும் படமே வெளியானது. நலிவடைந்த பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மூலமாக மேம்படுத்தலாம் என்ற கேரள மார்க்சிஸ்ட் அரசின் நிலைப்பாட்டை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியே ( மார்ச் 7,2005) ஆதரித்துள்ளது. ‘நவ கேரளத்துக்கான புதிய பாதைகள்’ என்பது பினராயி விஜயன் தயாரித்த ஆவணத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொண்டு விட்டது.

“In a slight shift from the Communist Party of India (Marxist) [CPI(M)]'s long held position on public sector units, the New Pathways for a Nava Keralam document presented by Chief Minister Pinarayi Vijayan, polit bureau member of the party, at the 24th State conference in Kollam, advocates restructuring of struggling PSUs under a public private partnership (PPP) model” ( மார்ச் 7,2025, தி இந்து)

சி.பி.எம். கட்சியின் 24 ஆவது அகில இந்திய மாநாட்டை ஒட்டி பல்வேறு இடங்களில் கருத்தரங்குகள் நடத்தப்பட்டது. கேரள மாநில தொழில்துறை அமைச்சர் பி.ராஜீவ், ‘வர்த்தக முதலீடுகளும் தொழிலாளர் உரிமைகளும்’ என்ற தலைப்பில் சென்னையில் 13.3.2025 அன்று சென்னையில் உரையாற்றினார். அவர் பேசியது சோசலிசமா? நவதாராளமயமா? என்பதை சண்முகம் பார்க்க வேண்டும். தனது உரையில் பி.ராஜீவ் ஒரு மேற்கோள் காட்டுகிறார்.

“என்னுடைய மூச்சு கம்யூனிசத்தைக் கட்டமைப்பது தான். ஆனால் என்னுடைய இந்த அரசாங்கம் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டமைப்பதற்காகப் பணியாற்றவில்லை. மத்தியில் ஆளும் காங்கிரசின் கொள்கைகளில் முற்போக்கான அம்சங்களை நிறைவேற்றுவதற்காகவே நாங்கள் முயற்சி செய்கிறோம். கட்சியின் திட்டத்தை அமல்படுத்துவது இயலாது” என்று சொன்னவர் யார் தெரியுமா? கேரள முதலமைச்சர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத். ‘பெருமுதலாளிகளுக்கு எதிராக நாங்கள் முழக்கமிட்ட காலத்தில், கேரளாவில் தொழில் தொடங்குவதற்கு பிர்லாவைத் தான் அழைத்து வந்தார் ஈ.எம்.எஸ்.’ என்று தனது உரையில் குறிப்பிடுகிறார் மார்க்சிஸ்ட் அமைச்சர் பி.ராஜீவ். இந்தக் கட்டுரைகளையும் தொகுத்து ‘பாரதி புத்தகாலயம்’ தான் வெளியிட்டுள்ளது.

‘காவி மயமாகும் சிவப்பு’ என்று ‘தினமணி’ மகிழ்ந்து அப்போதே தலையங்கம் தீட்டியதையும் மறக்க முடியாது. எனவே நவ தாராளமயம் போன்ற வார்த்தைகளை வைத்துக் கொண்டு கொம்பு சுற்றுவதை சண்முகம் போன்றவர்கள் குறைத்துக் கொள்ள வேண்டும்.

**தங்களது சந்தர்ப்பவாத அரசியல் நிலைப்பாடுகளுக்கு தத்துவார்த்த முலாம் பூசுவதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். செயலும் செயல் தந்திரமும் அற்ற நிலைப்பாடுகளுக்காக ரத்தம் கக்கும் வகையில் பேசுவதையும் குறைத்துக் கொள்ள வேண்டும்.**

● ●

---

### திரிஷாவுடன் முதல்வர் விஜய் பிறந்தநாள் கொண்டாட்டம்:

## அமோனியா விபத்து 10 பேர் பலி! அதே நாளில்தான் இதுவும் நடந்து இருக்கு!

### தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம்!

*சென்னை, ஜூன் 26-*

*திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஒரு இறால் பதப்படுத்தும் தொழிற்சாலையில் ஏற்பட்ட அமோனியாவாயுக் கசிவு விபத்தில் 10 தொழிலாளர்கள் உயிரிழந்ததும், 60க்கும்மேற்பட்டோர்உடல் நலக் குறைவால் மருத்துவமனைகளில் அனுமதிக்கப் பட்டதும் தமிழகம் முழுவதும்அதிர்ச்சியைஏற்படுத்தியுள்ளது.*

*இந்ததுயரசம்பவம்நடைபெற்ற அதே நாளில், தமிழக முதல்வரும் தமிழக வெற்றிக் கழக (த.வெ.க.) தலைவருமான விஜய் தனது 52வது பிறந்தநாளைக் கொண்டாடியதாக சமூகவலைதளங்களில் விவாதம்எழுந்துள்ளது. குறிப்பாக நடிகை திரிஷா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் விஜய்யுடன் கேக் வெட்டிய புகைப்படத்தை பகிர்ந்ததைத் தொடர்ந்து இந்த விவகாரம் மேலும் பேசு பொருளாகியுள்ளது.*

*விஜய்க்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து திரிஷா வெளியிட்ட பதிவில், “எல்லாவற்றையும்அர்த்தமுள்ளதாய் ஆக்கிய நபருக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்”என்றுகுறிப்பிட்டிருந்தார். மேலும், நள்ளிரவு 12 மணிக்கே வாழ்த்து தெரிவித்ததை சுட்டிக்காட்டும் வகையில் “00:00” என்றும் பதிவிட்டிருந்தார்.*

*இதற்கிடையில், திருவள்ளூர் விபத்து காரணமாகதலைமைச்செயலகத்தில் திட்டமிடப்பட்டிருந்த பிறந்தநாள் கேக் வெட்டும் நிகழ்வை முதல்வர் விஜய் ரத்து செய்ததாக தகவல்கள் வெளியானது. உயிரிழப்புகள் நிகழ்ந்த சூழலில் கொண்டாட்டங்கள் பொருத்தமல்ல என்ற காரணத்தால் அவர் அந்தநிகழ்வைத்தவிர்த்ததாக கூறப்பட்டது.*

*ஆனால், அதே நாளில் திரிஷாவுடன் கேக் வெட்டியதாக வெளியாகிய புகைப் படங்கள் சமூக வலைதளங்களில் விமர்சனங்களை கிளப்பின. விபத்தில்பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திக்காமல் பிறந்தநாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டதாக சிலர் குற்றம்சாட்டினர்.*

*இந்த நிலையில், தி.மு.க. ஐ.டி.விங்தனதுஎக்ஸ்(X)சமூக வலைதளப்பதிவில்இந்தவிவகாரத்தை விமர்சித்துள்ளது. நடிகை திரிஷா நடித்த திருப்பாச்சி திரைப்படத்தின் ஒரு காட்சியை பகிர்ந்த அந்த பதிவில், அமோனியா வாயுக் கசிவால் 10 பேர் உயிரிழந்ததும், பலர் சிகிச்சை பெற்று வருவதும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*மேலும், “அந்த நாளில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சென்று சந்திக்கவில்லை. எனவே அவருக்காக தெரிவிக்கப்படும் அனைத்து பிறந்தநாள் வாழ்த்துகளும் அர்த்தமற்றதாகதோன்றுகின்றன” என தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம் செய்துள்ளது.*

*இந்தவிவகாரம்தற்போது சமூக வலைதளங்களிலும் அரசியல் வட்டாரங்களிலும் விவாதப் பொருளாக மாறியுள்ளது. அதே நேரத்தில், விபத்து தொடர்பான மீட்பு மற்றும் விசாரணை நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.*

---

### சட்டம் – ஒழுங்கு கேள்விக்குறி! கோவையில் மீண்டும் பயங்கரம்!

## இளம்பெண் கொலை - காட்டுக்குள் நிர்வாணமாக அழுகிய நிலையில் சடலம் மீட்பு!

கோவை, ஜூன் 26 –

த.வெ.க.ஆட்சிபொறுப்பேற்றதில் இருந்து சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகஉள்ளது. கோவைசூலூரில்கடந்த மாதம் 10 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இந்தவழக்கில் 2 பேர்கைது செய்யப்பட்டனர். இந்த அதிர்ச்சி சம்பவத்தில் இருந்து மீள்வதற்குள் கோவை அருகே காட்டுப்பகுதியில் நிர்வாணமாக அழுகிய நிலையில் 25 வயது மதிக்கத்தக்க இளம்பெண் சடலம் மீட்கப்பட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்திஉள்ளது. அவர்பலாத்காரம் செய்து கொலை செய்யப்பட்டாரா? என காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

கோவையில் இருந்து பாலக்காடு செல்லும் மேற்கு புறவழிச்சாலை சுகுணாபுரம்அருகேமஞ்சுப்பள்ளம் ஓடை காட்டுப்பகுதி உள்ளது. இங்கு நேற்று முன்தினம் இளம் பெண் ஒருவர். நிர்வாண நிலையில் சடலமாக கிடந்தார். இதனை அங்கு இயற்கை உபாதை கழிக்கசென்றவாலிபர் ஒருவர்பார்த்து காவல்துறையினருக்குதகவல்கொடுத்தார். அதன்பேரில், குனியமுத்தூர் சப் இன்ஸ்பெக்டர் தாமரைக்கண்ணன் உள்ளிட்டகாவலர்கள்அந்தஇடத்துக்கு விரைந்து சென்றனர். அப்போது அங்குள்ள மஞ்சுப்பள்ளம் என்ற காட்டுப் பகுதியில் ஒரு புதருக்குள் சுமார் 25 வயதுமதிக்கத்தக்கஇளம்பெண்அழுகிய நிலையில் நிர்வாணமாக கிடந்தார்.

தொடர்ந்துகோவைமாநகரதெற்கு காவல்துணைஆணையர்கார்த்திகேயன் நேரில் சென்று விசாரணை நடத்தினார். பின்னர் மோப்பநாய் மற்றும் கைவிரல் ரேகை நிபுணர்கள் வரவழைக்கப்பட்டனர். மோப்பநாய், அங்கிருந்து சிறிது தூரம் ஓடிச் சென்று மீண்டும்திரும்பிவந்தது. யாரையும்கவ்விப் பிடிக்கவில்லை. கைவிரல் ரேகை நிபுணர்கள் அந்த இளம் பெண்ணின் உடலில் ஏதாவது கைவிரல் ரேகைகள் பதிவாகி இருக்கிறதா? என்று ஆய்வு செய்தனர். மிகவும்அழுகியநிலையில் இருந்ததால், அதில்காயங்கள்எதுவும் இருக்கிறதா? என்பதை கண்டுபிடிக்க முடியவில்லை. அங்குள்ள தடயங்களை சேகரித்து புகைப்படங்களை பதிவு செய்தனர். அங்கிருந்து ஒரு ஜோடி செருப்பு மீட்கப்பட்டது.

இதனையடுத்து காவல் துறையினர் சடலத்தை மீட்டு கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனைக்குஅனுப்பி வைத்தனர். அந்த இளம்பெண் யார்? எந்த ஊரை சேர்ந் தவர்? அவர் எப்படி உயிரிழந்தார்? என்பதும் தெரியவில்லை. சடலம் கிடந்த இடம் மதுக்கரைகாவல்நிலையத்திற்குஉட்பட்டது என்பதால் மதுக்கரை காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

இது குறித்து காவல்துறை அதிகாரிகள் கூறியதாவது: –

பெண் இறந்து 2 நாட்களுக்கும் மேல் இருக்கும் என தெரிகிறது. உடல் அழுகிஉப்பியநிலையில்இருந்ததால் காயங்கள்உள்ளதா?எனஅடையாளம் காண முடியவில்லை. பெண்ணின் ஒரு கையில் ‘ஜெகன்’ என்றும், அதன் அருகே இதயவடிவமும்பச்சைகுத்தப்பட்டு இருந்தது. மற்றொரு கையில் ‘எஸ்’, ‘ஜெ’ என்ற எழுத்துகளும் என பச்சை குத்தப்பட்டுள்ளது. அவருக்கு 25 வயது இருக்கலாம். யாரோ? காட்டுப்பகுதிக்கு அழைத்து சென்று பலாத்காரம் செய்து கொலை செய்திருக்கலாம். அந்த பெண் நிர்வாண நிலையில் பிணமாககிடந்ததால்பலாத்காரம் செய்து கொலைசெய்யப்பட்டு இருக்க வாய்ப்பு உள்ளது. எனினும், பிரேத பரிசோதனை முடிவில்தான் முழு விவரமும் தெரியவரும். இந்தவழக்குகுறித்து தீவிரமாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

கோவை சூலூரில் கடந்த மாதம் 10 வயது சிறுமி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இந்தவழக்கில் 2 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த அதிர்ச்சி சம்பவத்தில் இருந்து மீள்வதற்குள் நிர்வாண நிலையில் அழுகிய நிலையில் பெண் சடலம் மீட்கப்பட்டிருப்பது கோவையில் மீண்டும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. தவெக ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து சட்டம் ஒழுங்கு கேள்விக்குறியாகி இருப்பது மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.

சம்பவம் நடந்த பகுதி ஆட்கள் நடமாட்டம் இல்லாத பைபாஸ் சாலை பகுதி என்பதால் இளம் பெண்ணை உல்லாசத்துக்கு அழைத்து வந்து அப்போது ஏற்பட்ட தகராறில் கொலை செய்திருக்கலாம்எனதெரிகிறது. இந்த பகுதியில் அடிக்கடி இரவு நேரத்தில் வாகனங்களில் இளம் பெண்களை அழைத்துவந்துகாட்டுக்குள்ஜாலியாக இருப்பது வாடிக்கையாக நடைபெறுவதாகதெரியவந்துள்ளது. இதுகுறித்து காவல்துறையினரிடம்பலமுறைபுகார் அளித்தும்நடவடிக்கை எடுப்பதில்லை என அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

காவல் துறையினர் கோவையில் கடந்த சில நாட்களில் காணாமல் போன பெண்களின் விவரங்களை திரட்டிவருகின்றனர். காவல்நிலையங்களில் (மிஸ்சிங் ஆன) காணாமல் போனபெண்களின்பட்டியலைஆய்வு செய்து கொலை செய்யப்பட்ட பெண்ணை அடையாளம் காணும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

---

## கறைபடிந்த சி.டி.!




பிரம்மாதம்
பேரறிஞர்
மூதறிஞர்
பெரியவர்
பெருந்தலைவர்
கலைஞர்
நேற்றைய

அறிவாலய
பெருமனத்தார்
வரை

தகைசால்
முதல்வர்கள்
தடம்பதித்த
அவையில்

“அம்பிகாகாபி ஹோட்டல்” என
எழுதித் தரப்பட்டதை

“அம்பி “காகாபி” ஹோட்டல் என
வாசித்த கதையாக....

வந்தார்
படித்தார்
நடித்தார்
நையாண்டி
செய்தார்...

சம்பந்தமில்லாமல்
உளறினார்

சைகை
காட்டினார்

மொத்தத்தில்

குத்தாட்ட
முதல்வரது
கொள்கைப்
பாடலால் சொன்னால்

“கறைபடிந்த சிடி”

அம்புட்டுத்தான்.



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*